DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.II SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 757 / 2022 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 8 |
| Name | மருத்துவர் திருமதி. பத்மா |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

**(2,3,4 எதிரிகள் ஆஜர் - 1ம் எதிரி ஆஜரில்லை: 1ம் எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 22-06-2023.

**முதல்விசாரணை**

1. நான் தற்போது திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சைப்பிரிவில் மருத்துவர் ஆக பணிசெய்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 05.06.2022 தேதி நான் பணியில் இருந்த போது அதிகாலை 12.05 மணி அளவில் முத்தம்மாள் என்ற 60 வயது நபரை லெட்சுமணன் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார்.

2. அவர் தன்னை 6 அடையாளம் தெரிந்த நபர்கள் இரவு 8.15 மணி அளவில் வீட்டில் வைத்து செங்கலால் தாக்கியதாக கூறினார் . நான் அவரை பரிசோதனை செய்த போது அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது. காயம் 1) மூக்கில் ஒரு சிராய்ப்புக்காயம் 4x3 Cm அளவு காணப்பட்டது. (Bleeding ) அவரை உள்நோயாளியாக சிகிச்சையில் அனுமதித்தேன். அவருக்கு நுண்கதிர் படம் மற்றும் CT எடுக்கப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கினேன். **நான் வழங்கிய காயச்சான்று அ .சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது** . ஆய்வாளர் என்னை இது சம்மந்தமாக விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

3. கடந்த 04.06.2022 ம் தேதி இரவு 8.15 மணிக்கு சம்பவம் நடந்தது என்றால் சரிதான். சுமார் 4 மணிநேரம் கழித்து தான் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தார் என்றால் சரிதான்.

4. காயம்பட்டவருக்கு ஏற்பட்ட காயமானது கரடுமுரடான ரோட்டிலோ அல்லது வீட்டிலோ குப்புற விழுந்தால் ஏற்பட வாய்ப்புஉள்ளது என்றால் சரிதான். காயம்பட்ட நபருக்கு கையாலோ, கம்பாலோ அடிப்பட்டதற்கான தடயம் ஏதுவும் இல்லை என்றால் சரிதான்.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு , சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

ஒப்பம்/– பி.மகாராஜன்.,
நீதித்துறை நடுவர் எண். II (FAC)
ஸ்ரீவைகுண்டம்.